**பெல்ஜியம் மற்றும் துருக்கி நாடுகளுக்கு இந்திய குடியரசுத் தலைவர் அரசுமுறைப் பயணம் (2-8 அக்டோபர் 2013)**

இந்திய குடியரசுத் தலைவர் திரு பிரணாப் முகர்ஜி அரசு முறைப்பயணமாக பெல்ஜியம் நாட்டில் 2013ம் ஆண்டு அக்டோபர் 2ந்தேதி முதல் 5ந்தேதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். பெல்ஜியம் மன்னர் அழைப்பினை ஏற்று அவர் செல்கிறார். இந்திய குடியரசுத்தலைவர் ஒருவர் பெல்ஜியம் நாட்டிற்கு செல்வது இதுவே முதல் முறை.

பெல்ஜியம் மன்னர் மேதகு பிலிப்புடன் இணைந்து அவர் யூரோப்பாலியா-இந்தியா 2013-14 ஐ கூட்டாக தொடங்கி வைப்பார்.

பெல்ஜியம் நாட்டில் சுற்றுப்பயணம் நிறைவு செய்த அவர் துருக்கி நாட்டில் 2013 அக்டோபர் 5ந்தேதி முதல் 7ந்தேதி வரை சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். துருக்கி அதிபர் அழைப்பினை ஏற்று அவர் அங்கு செல்கிறார். இந்திய குடியரசுத்தலைவர் துருக்கிக்கு செல்வது இது மூன்றாவது முறையாகும். இதற்கு முன்னதாக 1993 மற்றும் 1998ம் ஆண்டு இந்திய குடியரசுத் தலைவர்கள் அங்கு சென்றுள்ளனர்.

இந்த இரு பயணங்களின் போதும் குடியரசுத் தலைவருடன் உயர்மட்ட குழுவினர், மூத்த அதிகாரிகள் மற்றும் நமது கல்வி நிலையங்களின் மூத்த பிரதிநிதிகள் இடம் பெறுவார்கள்.

புது தில்லி

அக்டோபர் 01, 2013